இந்துப்பண்பாடுபற்றிய ஆய்வுப்புலங்களில் மேலைத்தேச ஆளுமைகளின் வகிபாகம்: ஒரு மீள்வாசிப்பு

திரு.ஜீ.பால்ராஜ்,

விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

ஆய்வுச் சுருக்கம்

பண்பாட்டு அசை வியக்கங்களில் இந்துப்பண்பாட்டிற்கு என்று ஒரு தனித்துவம் உண்டு. இந்து சமுதாயம்மரபு வழியாகப்பின் பற்றுகின்ற சமயமரபுகலை, சடங்கு, ஒழுக்கம், நம்பிக்கை, அறிவியல், பழக்கவழக்கம் முதலான அம்சங்கள் இந்துப் பண்பாட்டினுள் அடங்கும். இந்துப்பண்பாட்டம் சங்களைபல ஆய்வறிவாளர்களும் ஆய்வு செய்துள்ளனர். அவர்களை வெளிநாட்டவர், உள்நாட்டவர் என இருதளங்களில் வைத்து நோக்கலாம். குறிப்பாகமேலை நாட்டினர் இந்துப்பண்பாடு தொடர்பானகாத்திரமான ஆய்வுகளை பன்னெடுங்காலமாக மேற் கொண்டுவந்துள்ளனர். பண்டைக்காலம் முதலாக இந்தியாவிற்கும் மேலைநாடுகளுக்கும் இடையிலானபல தொடர்புகள் நிலவிவந்துள்ளன. அத்தகைய தொடர்புகளேகாலப் போக்கிலே இந்தியாவை காலனித்துவப்படுத்த காலாக அமைந்தது எனலாம். இந்த பாரியகாலனித்துவ முயற்சியினது, முதன்மை நோக்கமாக இருந்தது கிறிஸ்தவசமயத்தைப் பரப்புதலாகும். சாதியம், தீண்டாமை முதலான இந்துக்களுக்கே உரித்தான உள்ளகபடையாக் கநிலைமைகளை (Internal Stratification System) காலனித்துவ வாதிகள்நன்குபயன் படுத்திக்கொண்டு, இலவச ஆங்கிலக்கல்வி, அரசஉத்தியோகம், போன்றவற்றுடன் இதரலௌகீக சலுகைகளையும் அளித்துவகை தொகையற்ற இலட்சக்கணக்கான இந்துமக்களை மதம்மாற்றினர். இதன் பொருட்டாக பலபாதிரியார்கள் பயிற்சியளிக்கப்பட்டு

வரவழைக்கப்பட்டனர் இவ்வாறு வருகைதந்தவர்களுள் மக்ஸ்முல்லர் (Max Mullar), வில்லியம் ஜோன்ஸ் (William Jones), H.H.வில்சன் (H.H.wilson), ஸ்டெல்லாகிறாம்ரிச் (Stella Kramrisch), சார்ள்ஸ்வில்கின்ஸ் (Charles Wilkins), A.A.மக்டோனால் (A.A.macdonell), போன்ற மேலைத்தேசத்து ஆளுமைகள் இந்தியசுதேசியப் பண்பாட்டினால் ஈர்க்கப்படுகிறார்கள். இதனால், இந்திய தேவநாகரி மொழியான சமஸ்கிருத மொழியினைப் பயின்று இந்து சமயத்திலுள்ள வியப்பூட்டும் பல அம்சங்களை அறியலானார்கள். இந்துப் பண்பாட்டை அறிந்து கொண்டதன் விளைவாக, இவர்களினால் பல ஆய்வுப்படைப்புக்கள் வெளிவந்தன. குறிப்பாக, மக்ஸ்முல்லர் இருக்குவேதத்தினை முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து இந்துப்பண்பாட்டினை உலகறியச்செய்த பெருமைக்குரியவர். ஆகவே இந்துக்களின் பழமையான, செழுமையான இந்துப்பண்பாட்டம் சங்களைசர்வதேச பரிமாணங்கொள்ளச் செய்ததில் மேலைத்தேச ஆளுமைகளின் வகிபாகம் இன்றியமையாதது ஆகும். இதனால், அவர்களது ஆய்வுப்படைப்புக்களை ஆராய்வதே இவ்வாய்வக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்விற்கு வரலாற்றியல் ஆய்வு அணுகுமுறையும் (Historical methodology), விபரண ஆய்வு அணுகுமுறையும் (Discriptive methodology) உபயோகிக்கப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: *இந்துப்பண்பாடு, இந்து இலக்கியம், வகிபாகம், மேலைத்தேச ஆளுமைகள்.*

அறிமுகம்

உலகில் பழம் பெரும் பண்பாடாகத்திகழும் இந்துப்பண்பாடு இந்தியாவிலே தோன்றி காலப்போக்கில் பலநாடுகளில் பரவி, இன்று உலகம் பூராகவும் பின் பற்றப்படும் ஒரு செழுமையான பண்பாடாகத்திகழ்கிறது. இத்தகைய சிறப்பு மிக்க இந்துப்பண்பாட்டினை ஆய்வு செய்து அதனை உலக அரங்கிற்கு கொண்டு சேர்த்து, சர்வதேச பரிமாணங்கொள்ளச் செய்தவர்களில் மேலைத்தேச அறிஞர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். 17ஆம் நூற்றாண்டில் வர்த்தகத்தினைமையமாகக் கொண்டு இந்தியாவினை காலனித்துவப்படுத்திய பிரித்தானியர்கள் அங்கு மேலைத்தேச

கலாசாரங்களை விதைப்பதில் முனைப்பாக செயற்பட்டனர். இவற்றுள் கிறிஸ்தவசமய பரப்புரைபிரதானமாக அமைந்தது. இதற்காக ஆங்கிலதேசத்திலிருந்து மிஷனரிகள் வரவழைக்கப்பட்டன.

மிசனரிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திய பாதிரியார்கள் கத்தோலிக்க சமயத்தைப்பரப்புவதற்கு தடையாக இருந்த இந்துப்பண்பாட்டினை அறியமுயன்றனர். இந்த முயற்சிகால வோட்டத்தில் அவர்கள் இந்துப்பண்பாட்டினை நேசிக்கவும், ஆய்வு செய்யவும் வழியமைத்துக் கொடுத்தது. இந்துப் பண்பாட்டினால் கவரப்பட்டு அதனை ஆய்வு செய்த இவர்கள், இந்துப்பண்பாட்டில் இருந்து பெற்றுக் கொண்ட நன்மைகளைதங்களது நாட்டு மக்களும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டார்கள். இதனால் இந்துசமயம் தொடர்பான நூல்களையும், கட்டுரைகளையும் எழுதிய தோடு இந்துசமயபனுவல்களை ஆங்கிலமொழியில் மொழிமாற்றமும் செய்தார்கள். இதனால் இந்துப்பண்பாடு மேலைநாடுகளைச் சென்றடைந்தது. இதனால், ஆங்கிலேயரின்காலனித்துவ ஆட்சியில் கிறிஸ்தவமயமாக்கலுடன் இந்துசமய உலகமயமாக்கலும் இடம் பெற்றது என்றுகூறினால் மறுப்பதற்கில்லை.

இந்துப் பண்பாட்டம் சங்களில் அதிகமாககவரப்பட்டு அதனை ஆய்வு செய்த மேலைத்தேச ஆளுமைகளாக மக்ஸ்முல்லர் *(Max Mullar)*, வில்லியம் ஜோன்ஸ் *(William Jones)*, *H.H.*வில்சன் *(H.H.wilson)*, ஸ்டெல்லாகிறாம்ரிச் *(Stella Kramrisch)*, சார்ள்ஸ்வில்கின்ஸ் *(Charles Wilkins)*, *A.A.*மக்டோனால் *(A.A.macdonell)*, முதலானவர் களைக்குறிப்பிட முடியும்.

இவர்கள் இந்து சமயத்தின் மூலங்களான வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், பிராமணங்கள், பகவத்கீதை, புராணங்கள், ஸ்மிருதிகள், அர்த்தசாஸ்திரம், இதிகாசங்கள்போன்றநூல்கள், சடங்குகள், கலைகள், சமயம், வழிபாடுஎன இந்துப்பண்பாட்டினுடைய பல கூறுகளையும் ஆய்வுசெய்து, அவற்றினை வெளியுலகிற்கு கொண்டு சேர்த்தனர்.

இவ்வாய்வுக் கட்டுரையின் விரிவுகாரணமாக, மக்ஸ்முல்லர் *(Max Mullar)*, வில்லியம் ஜோன்ஸ் *(William Jones)*, *H.H.*வில்சன் *(H.H.wilson)*, ஸ்டெல்லாகிறாம்ரிச் *(Stella Kramrisch)*, போன்றோர்கள் மட்டுமே இவ்வாய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இந்துப்பண்பாடு தொடர்பாக

மேற்கொண்ட ஆய்வுகளை ஆராய்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

மக்ஸ்முல்லர்*(Max Mullar)*

கீழைத் தேயகலாசார, சமூக, சமயவழிபாடுகளைப் பற்றி ஆராய்ந்த மேலைத்தேய முக்கியமான அறிஞர்களுள் மக்ஸ்முல்லர் முதன்மையான ஒருவராகசுட்டப்படுகின்றார். 'வேதகாலரி*ஷி*' எனசுவாமிவிவேகானந்தரால் புகழப்பட்ட மகஸ்முல்லர் 'இந்தியதத்துவ நூல்களைப் படிப்பதன் மூலம் நமது அகவாழ்வு தூய்மையானதாகவும் பரிபூரணமானதாகவும் அமையும்' எனக் கூறிச் சென்றுள்ளார்.

ஜேர்மனியில் 1823 ஆம் ஆண்டு டிசம்பர் 06 ஆம் திகதிவில்ஹெல்ம்முல்லர், அடல்ஹெய்ட்முல்லர் என்பவருக்குமகனாகப் பிறந்தமக்ஸ்முல்லர், கிறிஸ்தவசமயத்தில் எவ்வாறு சீர்திருத்தம் ஏற்பட்டதோ அவ்வண்ணமே இந்துசமயத்திலும் சீர்திருத்தம்வர வேண்டு மெனவற்புறுத்தியவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவரைப்போன்று வேறுஎவரும் இந்துசமய இலக்கியங்களை மேல்நாட்டவருக்கு அறிமுகம்செய்வதிலும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் நிகரான சாதனைகளைப் புரியவில்லை.

இவர்வேத, புராண மற்றும் ஒப்பியல் ஆய்வுகளை திறம்பட மேற்கொண்டிருந்தார். மக்ஸ்முல்லர் 'கீதோபதேசத்தை' (Hitopadesa) ஜேர்மன் மொழியிலே மொழி பெயர்த்து வெளியிட்டார். சமகாலத்தவரான இராமகிருஸ்ண பரமஹம்சரினுடைய வேதாந்தசாரமான சிந்தனைகள் இவரைப்பெரிதும் கவர்ந்தன. அவற்றைப் பற்றி பல கட்டுரைகளையும் நூல்களையும் மக்ஸ்முல்லர் எழுதியுள்ளார்.

1845 ஆம் ஆண்டு பாரிஸ் நகரம் சென்ற போது அங்கு சமஸ்கிருதத்தில் தலை சிறந்தவராககாணப் பட்டயூஜின்பூனுவ் (Eugenevournouf) என்பவர் இருக்கு வேதம் மொழி பெயர்க்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி மீண்டும் மீண்டும் கூறி மக்ஸ்முல்லரின் இளம்மனதில் பதியவைத்தார். பின்பு இதனை மொழி பெயர்க்கும் நபருக்கான தேடுதல் வேட்டை இலண்டனில் நடை பெற்ற போது யூஜின்பூனுவேமக்ஸ்முல்லரின் பெயரை ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்த வில்ஸனிடம் பரிந்துரை செய்தார்.

இதனால் மக்ஸ்முல்லர் இருக்கு வேதம் முழுவதையும் மொழி பெயர்க்கும் அதிதீவிர முயற்சியில் ஈடுபட்டார். இங்கிலாந்திலுள்ள வேதம் தொடர்பான ஏட்டுச்சுவடிகளையும், குறிப்புக் களையும் ஆதாரமாகக் கொண்ட தோடு இருக்கு வேதத்திற்குசாயனரால் எழுதப்பட்ட உரையைமையமாகக் கொண்டும் இம் மொழி பெயர்ப் பினை மேற்கொண்டார்.

1028 பாசுரங்களையும், 10580 செய்யுள்களையும், 153826 வார்த்தைகளையும் கொண்ட இருக்கு வேதத்தை மொழி பெயர்க்கும் முயற்சியில் 1849 ஆம் ஆண்டு ஈடுபட்டு 1874 ஆம் ஆண்டு முழுமையாக மொழி பெயர்த்தார். இருக்கு வேதத்தை முழுமையாகப் பதிப்பித்து வெளியிட்டமை அவருடைய மிகப் பெரும் சாதனையாகும். மேலும் வேதகால இறைதத்துவக் கோட்பாட்டினை அனைத்திறைமைக் கோட்பாடு, பல கடவுட்கோட்பாடு (பொலித்தீயிசம்), ஒரு தெய்வக்கோட்பாடு (மொனோதீசம்), பரம் பொருள் கொள்கை (ஹெனோதீயிஸம்) என பலவாறு பகுத்துக்கூறினார்.

கீழைத் தேயசமயங்கள் பற்றியும் குறிப்பாக இந்துசமயம் தொடர்பாகவும் பலநூல்களை எழுதியுள்ளார். புராதன வடமொழி இலக்கியவரலாறு (History of Ancient Sanskrit Literature), இந்தியாஎமக்கு எதைப்புகட்டியது (India what can it Teach us), சமயத்தின் அறிவயலுக்கான அறிமுகம் (Introduction to the Science of Religion), இந்திய மெய்யியலின் ஆறு முறைமைகள (Six Systems of Hindu Philosophy) முதலிய நூல் களைஎழுதியுள்ளார்.

இவருடைய படைப்புக்களின் வரிசையில் கிழக்கின் புனிதநூல்கள் (The Sacred Books of the East) எனும் இவரது நூல் பிரமாண்டமான படைப் பாகத்திழ்கின்றது. அவருடையதும் மற்றும் பல அறிஞர்களுடையதும் நூல் களை உள்ளடக்கி காணப்படும் இந்த நூல் தொகுதியானது மொத்தமாக 50 நூல் களை உள்ளடக்கியுள்ளது. இதில் 22 தொகுதிகள் இந்துசமயக் கருத்துக்களை கூறுகின்றன.

மக்ஸ்முல்லர் அந்நூலின் ஐம்பது தொகுப்புக்களிலே 1ஆம், 15ஆம், 32 ஆம் தொகுதிகளில் தனது நூல்களை உள்ளடக்கிய தோடு முப்பதாவது தொகுதியினை ஹேர்மன் ஒல்டன் பேர்க்என்பவரின் ஆக்கத்துடன் இணைத்து தனது ஆக்கத் தினை வெளிப்படுத்தியுள்ளார்.

'உபநிடதங்கள், பகுதி 2 இல் 1 (**The Upanishads,Part 1 of 2**)' எனும் மக்ஸ்முல்லரின் 1 ஆம் தொகுதியானது சாந்தோக்கிய, தலவகார (கேன), ஐதரேய முதலிய உபநிடதங்களைப் பற்றியும் பேசுவதோடு உபநிடதவகைகள், உபநிடதமகாவாக் கியங்களுக்கான விளக்கங்கள், உபநிடதங்களின் உபயோகங்கள் பற்றியும் இத்தொகுதியில் கூறப்பட்டுள்ளன. 'உபநிடதங்கள், பகுதி 2 இல் 2 (**The Upanishads,Part 2 of 2**) எனும் மக்ஸ்முல்லரின் 15 ஆம் தொகுதியானதுகட, முண்டக, தைத்தீரிய, பிருகதாரண்ய, சுவேதாஸ்வர போன்ற உபநிடதங்கள் பற்றி விளக்குகின்றது.

'வேதகீர்த்தனைகள் பகுதி 2 இல் 1 (**Vedic Hymns,vol.1 of 2**)' எனும் மக்ஸ்முல்லரின் 32 ஆம் தொகுதியானது வேதகாலத் தெய்வங்களாகிய இந்திரன், உருத்திரன், வாயு ஆகியோர் பற்றிய மந்திரங்களைக் கூறுவதோடு 550 கீர்த்தனைகளில் இத்தொகுதி விளக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு இவரதுபடைப்புக்கள் மட்டு மல்லாது வேதாந்தம், கர்மக்கோட் பாடு, சடங்குகள் முதலான இந்துப்பண்பாட்டம் சங்கள் தொடர்பாக இவர் நிகழ்த்திய விரிவுரைகளும் இந்து சமயத்தினை உலக அரங்கில் நிலை நிறுத்தச் செய்தது.

வில்லியம் ஜோன்ஸ் (Wiiliam Jones)

இந்தியாவின் புராதன மொழிகள், கலாசாரம் பற்றிய ஆராய்ச்சிகளின் முன்னோடிகளுள் வில்லியம் ஸ்ஜோன்ஸ் முதன்மையானவர். சமஸ்கிருத மொழியின் அருஞ்சிறப்புக் களை மேல் நாட்டவருக்கு அறிமுகம் செய்துவைத்தவர் வில்லியம் ஜோன்ஸ் என்றே கூறலாம். இவர் பன் மொழிப்புலமை கொண்டவராக இந்தியா வந்தாலும் சமஸ்கிருத மொழியே இவரைப் பெரிதும் கவர்ந்திருந்தது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மிகச்சிறந்த புத்தி ஜீவியாகிய இவர் 25 செப்ரெம்பர் 1783 இல் இந்தியாவின் சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதியாக கடமையேற்று கல்கத்தாவந்தடைந்தார். இந்துக் கற்கைகள் தொடர்பாக அதியுன்னத ஆர்வம் கொண்ட இவர் இந்திய மெய்யியல் தொடர்பானவிடயங்களை ஒரே இடத்திலேயே இருந்துகற்க வேண்டும் என்பதைதன் கனவாகக் கொண்டு 1784 ஆம் ஆண்டு ஆசியியற்கழகத்தை (The Asiatic Society) உருவாக்கினார்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2022, IRJTSR

ஆசியியற் கழகத்தில் மேற்கத்தைய அறிஞர்களும், இந்திய அறிஞர்களும் இந்துசமய இலக்கியங்கள் தொடர்பான பல்வேறு எண்ணிலடங்கா ஆய்வுகளைமேற் கொண்டனர். அத்துடன் இக்கழகம் தம்மையொத்த கொள்கைகளையுடைய சில நிறுவனங்களுக்கு உதவிகளையும் வழங்கியது. அவற்றுள் முக்கியமாக இரு நிறுவனங்களைக் குறிப்பிடலாம்.

1. The college of Fort William

2. Serampore Mission of William Carey

இவற்றுள் Serampore Mission of William Carey எனும் நிறுவனத்திற்கு சமஸ்கிருத இலக்கியங்களை மொழி பெயர்க்கவும், பதிப்பிக்கவும் ஆசியியற்கழகம் உதவிகள் புரிந்தது. இங்கு சமஸ்கிருத இராமாயணம் முதலாவது புத்தகமாக தெரிவு செய்யப்பட்டது. இது 1788 -1839 வரை 20 தொகுதிகளாக ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

வில்லியம் ஜோன்ஸ் 1789 இல் காளிதாசரின் மிகச்சிறந்த நூலான அவிக்ஞானசாகுந்தலத்தை மொழி பெயர்த்துப் பதிப்பித்தார். அந்த ஆங்கில மொழி பெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு 'ஜோர்ஜ்போஸ்டர்' என்பவர் அவிக்ஞானசாகுந்தலத்தை ஜேர்மன் மொழியில் வெளியிட்டார். இதனால் ஜேர்மனியில் வாழ்ந்த மிகச்சிறந்த எழுத்தாளரும் சிந்தனையாளரு மாகியயொகான் வில்லியம் கொத்தே என்பவர் அவிக்ஞானசாகுந்தலத்தை வாசித்தறிந்து அவ்விலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார்.

இந்தியாவில் சமஸ்கிருதப் புலமை இல்லாத ஏனைய மொழிப்புலமை கொண்டவர்கள் மத்தியில் வில்லியம் ஜோன்ஸ்ஸின் மொழி பெயர்ப்பின் மூலமாகவே அவிக்ஞானசாகுந்தலம் அறிமுகமாகியது. அத்துடன் அவிக்ஞானசாகுந்தலம் கூறும் பண்பாட்டு அம்சங்கள் இத்தகைய மொழி பெயர்ப்புக்களின் ஊடாகவேஜேர்மன் மற்றும் ஆங்கிலமொழிபேசும் தேசங்களை சென்றடைந்தது என்றால் மறுப்பதற்கு எவருமில்லை.

இவைதவிர இந்து சமயத்தின் பல இலக்கியங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பகவத்கீதை, கருடபுராணம், ருதுசம்ஹாரம், ஹிதோபதேசம், மனுவின் மனுஸ்மிருதி போன்ற வற்றுடன் காயத்திரி

மந்திரத்தினையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உபநிடதங்களைப் பொறுத்தவரை பல உபநிடதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ஈசோ உபநிடதத்தின் பதினெட்டு செய்யுட்களையும், மைத்திராயினி உபநிடதத்தின் ஏழுபகுதிகளில் ஒன்றையும் மொழி பெயர்ப்புச் செய்தார். பல இந்துத் தெய்வங்களைப் பற்றியும், தேவதைகளைப் பற்றியும் உள்ள பாடல் களை அவர் மொழி பெயர்த்துள்ளார். பூசன், சூரியன் போன்ற தேவர்கள் பற்றிய சிந்தனைகள் அவரைப் பெரிதும் கவர்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். நீரில் ஒளிந்திருக்கும் நாராயணன் பற்றிய சிந்தனைகளும் அவருக்கு பிடித்தமானவை. இவை பற்றிய பாடல்களையும் இவர் மொழி பெயர்த்துள்ளமை இவரின் பணியின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றது.

எச்.எச்.வில்சன் (H.H.Wilson)

இந்துப் பண்பாட்டம் சங்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டு, இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கிற்கு கொண்டு சேர்த்தவர்களில் வில்சன் குறிப்பிடத் தக்கவர். இவர் ஒரு ஆங்கிலேய கீழைத்தேசவியலாளர் ஆவார். இலண்டன் தோமஸ்வைத்தியசாலையில் மருத்துவம் கற்று கிழக்கிந்தியவர்த்தககம் பனியின் பணிப்பின் பேரில் உதவி சத்திர சிகிச்சை நிபுணராக 1808 இல் இந்தியாவுக்கு வருகைதந்தார். இந்தியாவின் புராதனமான மொழி மற்றும் இலக்கியம் என்பவற்றில் கொண்ட ஆழ மான ஈடுபாடு காரணமாக தோமஸ்ஹென்றி இவரை 1811 இல் ஆசியியற்கழகத்தின் செயலாளராக நியமித்தார்.

இதன் செயலாளராக இருந்து பல இந்துசமய இலக்கியங்களை மொழிபெயர்த்து அதில் கூறப்பட்ட செய்திகளை மேலைநாடுகளுக்கு கொண்டு சேர்த்துள்ளார். 1813 இல் காளிதாசரினுடையமேகதூதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து **Meghaduuta** அல்லது **Cloud-Messenger** எனும் பெயரில் வெளியிட்டார். அத்துடன் 1819 இல் முதலாவது சமஸ்கிருத-ஆங்கில அகராதியையும் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் ஆயுர்வேதத்திலும், சத்திரசிகிச்சையிலும் மிகுந்த ஆர்வம் உடையவராக இருந்த இவர் உள்நாட்டில் வாந்திபேதிக்கும், தொழு

நோய்க்கும் எத்தகைய சிகிச்சை முறைகளை மேற்கொண்டிருந்தனர் என்பதனை அறிந்து கொல்கத்தா பௌதீக மருத்துவத் துறைக்கு 'இந்துக்களின் மருத்துவமும் சத்திரசிகிச்சை விஞ்ஞானமும்' ((Medical and Surgical Sciences of the Hindus) என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டிருந்தார்.

இந்து சமயம் தொடர்பாக, 'காஸ்மிரினுடைய இந்து வரலாறு' (hindu History of Kashmir), 'இந்துக்களின் சமயப்பகுதிகள்' (Religious Sects of the hindus) இந்துக்களது நாடக அரங்கியல் தொடர்பான நூல்களையும் வெளியிட்டுள்ளார். 1827 இல் 'இந்து அரங்கத்தினுடைய தேர்ந்தெடுக்கப் பட்டமாதிரிகள் '(Select Specimens of the Theatre of the Hindus) என்ற நூலை வெளியிட்டார். இந்நூல் இந்திய நாடகம் பற்றிய முழுமையான ஆய்வாக அமைந்தது. அதில் முழுமையாக 6 நாடகங்களை மொழி பெயர்த்துள்ள தோடு 23 நாடகங்களை பகுதியளவிலும் உள்ளடக்கியுள்ளார். இந்நூல் பின்னை நாளில் ஜேர்மன், பிரெஞ்சு மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கீழைத்தேசவியல் தொடர்பாக பலவிடயங்களை உள்ளடக்கிய **Mackenzie Collection** எனும் பெரிய தொருவிபரணத்தொகுப்பை 1828 இல் வெளியிட்டிருந்தார். இத்தொகுப்பில் அவர் தென்னிந்தியாவில் உள்ளகல் வெட்டுக்கள், பழம் பொருட்கள், தொல் பொருட்சின்னங்கள் பற்றி உள்ளடக்கியுள்ள தோடு 'பாண்டிய இராச்சிய வரலாற்றின் சுருக்கம் (Historical Sketch of the Kingdom of Pandya),'புராணங்களின் ஆய்வு'(Analysis of the Puranas) ஆகிய ஆக்கங்களையும் உள்ளடக்கியுள்ளார். சஞ்சிகை ஒன்றில் 'இந்துக்களின் சமயவிழாக்கள்' (Religious Festivals of the Hindus) எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார்.

கங்கனரின் ராஜதரங்கினிய எனும் நூலை 1825 இல் பதிப்புச் செய்தமை, சாங்கியகாரிகை பற்றி 1837 இல் நேரடிவர்ணனை வழங்கியுள்ளமை, 1840 இல் விஸ்ணு புராணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்தமை, அத்துடன் பதிணென்மகா புராணங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்தமை, இருக்கு வேதப்புனிதப் பாடல்களின் 3 பகுதிகளையும் (The Sacred Hymns of the Rigveda) ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்தமை போன்ற பணிகள் இந்துசமயத்தின் வளர்ச்சிக்கான எச்.எச். வில்சனின் மகத்தான பங்களிப்பை வெளிப் படுத்துகின்றது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

© 2022, IRJTSR

ஸ்டெல்லாகிறாம்ரிச் (Stella Kramrisch)

ஸ்டெல்லாகிறாம்ரிச் இந்துக் கலைகள் பற்றிய ஆய்வுகளைமேற் கொண்டு அதனை மேலைத் தேயமக்களுக்கு அறிமுகம் செய்த சிறந்த பெண் மணியாகதிகழ்கின்றார். இவர் 1896.05.29 அன்று ஒஸ்ட்ரியாவில் பிறந்தார். இவர்வலே நடனத்தைப் பயின்ற தோடு அந்நடனத்தில் மிகுந்த ஆர்வமுடையவராகவும் விளங்கினார். பத்துவயதில்வியட்னாதேசத்துக்கு இடம் பெயர்ந்த இவர் ஒருநாள் பகவத்கீதையை பார்க்க நேர்ந்த போது 'என்னுடைய மூச்சை நிறுத்தும் அளவிற்கு என்னைக் கவர்ந்திருந்தது' என்று அதைப் பார்த்ததும் கூறினார்.

கலை, கலை இரசனை, இந்துக் கலைகள் என் பவற்றில் அதியுன்னத ஆர்வம் கொண்ட இவர் இந்தியக் கலைகள், இந்து சமயம் தொடர்பாக அறியப்படுகின்ற ஒருவராக விளங்கினார். வியட்னா பல்கலைக்கழகத்தில் இந்தியக்கலைகள், சமஸ்கிருதம், மானிடவியல், இந்திய மெய்யியல் ஆகியவிடயங் களைக்கற்றார். 1924 இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் இந்திய கலைகளுக்கான பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அத்துடன் மிக நீண்டகாலமாக அமெரிக்க பென்சல் வேனியா பல்கலைக்கழகத்தில் (University of Pennsylvania) தென்னாசிய கலைகளுக்கான பேராசிரியராகவும் கடமையாற்றினார்.

1954 – 1972 வரையானகாலப் பகுதியில் பிலாடல் பியாஅருங்காட்சியகத்தில் (Philadelphia Museum) அரங்கநிர்மாணிப்பாளராக கடமையாற்றினார். 'அறியப்படாத இந்தியாவில் பண்டைய காலத்து மக்களின் சடங்கும்கலையும்' (Unknown India: Ritual Art in Tribe and Village) என்ற தலைப்பில் 500க்கும் அதிகமானசமயப் பொருட்களை காட்சிப் படுத்தி கண்காட்சி நிகழ்த்தினார்.

அதே அருங்காட்சியகத்தில் 1981இல் 'சிவனுடைய உருவமைதிகள்' (Manifestations of Shiva) என்ற தலைப்பில் கண்காட்சியை நடாத்தினார். இது தான்கடவுளைப் பற்றிய முதலாவது பெரியகண் காட்சியாக அமைந்தது. இந்தியக்கலைகள், சிற்பங்கள் தொடர்பான கண்காட்சியாகவே அதனை ஒழுங்கமைத்திருந்தார். சோழர்காலத்து வெண்கலத்தாலான இராமர், சிவன், கிருஷ;ணர், ராதைமுதலான உருவங்களும் அங்கேகாட்சிப் படுத்தப்பட்டன.

அத்துடன் இந்துக்கலைகள் தொடர்பாகவும் பலநூல்களை இவர்எழுதியுள்ளார். 'இந்துக்கோயில்' (Hindu Temple),' இந்தியக்கலைக் கொள்கைகள் '(Principlesof Indian Art), 'சிவனின்சந்நிதானம்' (The Presence of Siva), முதலானவைபுகழ் பெற்ற அவருடைய நூல்களாகும். இவருக்கு 1982 இல் இந்திய அரசாங்கத்தினால் பத்மபூசன் விருதுவழங்கி கௌரவிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

முடிவுரை

வர்த்தகத் தினைமையமாகக் கொண்டு இந்தியாவிற்குள் நுழைந்து, அந்நாட்டினை காலனித்துவப் படுத்திய ஆங்கிலேயர்கள் அங்கு கிறிஸ்தவசமயத்தினைப் பரப்புவதனை முதன்மை நோக்காகக் கொண்டு செயற்பட்டனர். இந்நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக ஆங்கில தேசத்தில் இருந்து பலபாதிரியார்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு வருகைதந்தவர்கள் சமயம்பரப்பும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டனர். சமயப்பரப்புரையில் தங்களை ஈடுபடுத்தினாலும், அங்கு நிலவியசுதேசபண்பாட்டினையும் அறிய வேண்டும் என்ற ஆவலுடன் பலர் செயற்பட்டனர். அவ்வாறு இந்துப் பண்பாட்டில் ஈடுபாடு கொண்டு, அதனை அறியவேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டவர்களில் மக்ஸ்முல்லர், வில்லியம் ஜோன்ஸ் போன்றோர்கள் முக்கியமானவர்கள். இந்துப் பண்பாடு தொடர்பானவிடயங்களை அறிய வேண்டும் என்பதில், இவர்கள் காட்டிய ஆர்வமே இந்துமத மூலநூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் இந்துப்பண்பாடு தொடர்பான ஆங்கிலநூல் களை எழுதவும் வழிவகுத்தது எனலாம். இதுவே மேலைநாடுகளில் இந்துப்பண்பாட்டுச் சிந்தனைகள் தடம் பதியக்காரணமாகவும் அமைந்தது.

மேலைத்தேச ஆளுமைகள்சமயம், கலை, விழாக்கள், இலக்கியம் முதலான இந்துப்பண்பாட்டின் ஒவ்வொரு கூறுகளிலும் ஆர்வம் கொண்டு, அதனைதனித் தனியாக ஆராய்ந்து அவற்றிலிருந்து பலபுதுமைகளையும், நன்மை களையும் பெற்றுக் கொண்டார்கள். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற் கிணங்கதாங்கள் பெற்றுக் கொண்ட

நல்லவிடயங்களைதங்களுடைய நாட்டு மக்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு பலஇந்துசமய இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததோடுமட்டு மல்லாது பலபடைப்புக்களையும் படைத்தளித்தார்கள். இதனால், மேலைத்தேச ஆளுமைகளால் இந்துப்பண்பாடு அன்றைய காலகட்டத்தில் மேலை நாடுகளுக்கு கொண்டு சேர்க்கப்பட்டது. எனவே, இன்று உலக மெங்கும் தனது கிளைகளைப் பரப்பி ஒரு பெரும் விருட்சமாக இந்துப்பண்பாடு செழுமையாக வளர்ந்து நிற்கின்றது என்றால், அதற்கு மேலைத்தேச ஆளுமைகளது இந்துப்பண்பாடு தொடர்பானகாத்திரமான ஆய்வுகள் முக்கியகாரணமாகும் என்பது எவரும் மறுப்பதற்கில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உசாத்துணைநூல்கள்

[1] சுபராஜ்.ந., (2012), 'இந்துமதமும்மேற்கத்தையவர்களின்ஆய்வுகளும்', அறிவகம்,கிளிவெட்டி,திருமலை

[2] வாமன்.நா., (2011), 'மக்ஸ்முல்லர்', இந்துக்கலைக்களஞ்சியம், தொகுதி 11, இந்துசமயகலாசாரஅலுவல்கள்திணைக்களம்,கொழும்பு.

[3] முகுந்தன்.ச., (2021), 'இந்துக்கற்கைகளைவளமூட்டியமேலைத்தேசத்துஆளுமைகளும்ஆய்வுகளும்', குமரன்புத்தகஇல்லம், கொழும்பு.

[4] Girardot.N.J.,(2002), **“Maxmullers” “Sacred Books” and the Ninenteenth –Century Production of the Comparative Science of Religion”,** The University of Chicago Press.

[5] Stoller miller,Barbara.,(1983), **“Exploring India’s Sacred Art Selected Writings of Stella Kramrish”**, University of Pennsylvania press.